**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO. 22 /2022**

Name : மூர்த்தி

Father/Husband Name : பெருமாள்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.12.2023.

இருதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

குறுக்கு விசாரணை

நான் ஸ்டேட்பாங்கில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். தற்பொழுது எந்த வேலையும் செய்யவில்லை. பிரதிவாதிகளை 2008 அக்டோபரிலிருந்து எனக்கு நன்றாக தெரியும். எனக்கு யார் மூலமாக பிரதிவாதிகளை தெரியும் என்றால் வங்கியில் வீட்டு கடன் வாங்குபவர் மூலமாக தெரியும். நான் 31.5.2014-ல் பணி ஓய்வு பெற்றேன். பணி ஓய்வு பணிக்கொடைகள் ஜுன் மாதத்திற்குள் வந்து விட்டது. சுமார் 50 லட்சத்திற்கு பணி ஓய்வு பலன்கள் வந்தது. நான் வருமானவரி கட்டுபவர். வருமானவரி பணிஓய்வு பெறும் வரை வருமானவரி கட்டிவந்தேன்.

பிரதிவாதிக்கு கடனாக கொடுத்த பணத்தை எனது வருமானவரியில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. சாட்சி சொல்கிறார். 31.5.2014 வரையிலான வருமானவரி கணக்கு போட்டு கட்டிவிட்டேன். அதன் பிறகு 2 மாதங்கள் கழித்து தான் 4.8.2014-ல் ஒரு 10 லட்சமும், அதன் பின்னிட்டு 9 லட்சத்து 87 ஆயிரம் 1.10.2014 அன்றும் கொடுத்தேன். எனவே எனது வருமானவரி கணக்கில் காட்டவில்லை. எனவே இந்த பணத்தை வட்டிக்காகத்தான் கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் எனது ஓய்வு பணத்தை வேறு யாருக்கும் வட்க்கு கொடுக்கவில்லை.

பிரதிவாதி பெயரில் எத்தனை வழக்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது நான் தாக்கல் செய்த வழக்கு பற்றி எனக்கு தெரியும். எந்தெந்த தேதியில் நான் பிரதிவாதிக்கு பணம்

கொடுத்தேன் என்றால் 4.8.2014 ரூபாய் 10 லட்சமும், 1.10.2014-ல் 9 லட்சத்து 87 ஆயிரம் கடன் கொடுத்தேன். பணம் கொடுத்ததை ஒரே பாண்டில் எழுதினேனா அல்லது வேறு வேறு பாண்டில் எழுதினேனா என்றால் 5 பாண்டுகளில் எழுதினோம். அந்த பணத்தை எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்றால் குடியாத்தம் பி.டி.ஓ. ஆபீஸ் எதிரில் ஒரு இந்து கோவில் உள்ளது அங்கு வைத்து தான் 10 லட்சம் கொடுத்தேன். அதை பணமாக கொடுத்தேன்.

நான் பேங்கில் மேலாளராக இருந்து பணி ஓய்வு பெற்றேன். எனக்கு அந்த சட்ட நடவடிக்கைகள் தெரியும் என்றால ் சரிதான். நான் 50 ஆயிரம் வரை தான் பணமாக கொடுக்கவேண்டும் ் என்றாலும் அதற்கு மேற்பட்ட தொகையை காசோலையாத்தான் கொடுக்கவேண்டும் என்றாலும் பிரதிவாதிக்கு உடனடியாக பணமாக தேவைப்பட்டதால் பணமாக கொடுத்தேன். 4.8.2014 தேதியிலேயே ஒரு பாண்டிற்கு 2 லட்சம் வீதம் 5 பாண்டுகள் எழுதினோம். என்ன காரணத்திற்காக ரூபாய் 10 லட்சம் கொடுத்தேன் என்றால் பிரதிவாதிகள் 3 அண்ணன் தம்பிகள் அதில் 3வது தம்பி விநாயகமூர்த்தி காலமாகிவிட்டார். பாகப்பிரிவினை வழக்கு இருந்தது அது சம்மந்தமாக அவர்களுக்கிடையே தீர்வு காணதேவைப்பட்டதால் கொடுத்தேன். அந்த பாகப்பிரிவினை வழக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அந்த பாகப்பிரிவினை தீர்ப்பு நகல் என்வசம் உள்ளது. நான் இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

அந்த 5 பாண்டுகள் எங்கு வைத்து எழுதினோம் என்றால் குடியாத்ததில் தாலுக்கா ஆபீசில் வைத்து எழுதினோம். யார் எழுதியது என்றால் சிவஞானம் என்பவர் ரெகுலராக எழுதுபவர். அந்த சிவஞான் ஏற்கனவே எனக்கு தெரிந்தவர் அல்ல. அவர் பெயர் எவ்வாறு தெரியிம் என்றால ் அவர் அவ்வாறு கையெழுத்து போட்டுள்ளார். அந்த பாண்டுகளை கருப்புகலர் பேனாவில் எழுதினார். மொத்த பாண்டும் கருப்பு கலர் மையினால் எழுதப்பட்டது. அதில் புளூ கலர் பேனாவில் எழுதியிருந்தால் ் அது தவறு என்றால் கருப்புகலர் பேனா என்று கருதினேன் அதனால் அவ்வாறு கூறினேன்.

அந்த 5 பாண்டுகளாக தனித்தனியாக எழுதினோம் என்றால் ஒரே பாண்டில் 10 லட்சம் இருந்தால் அது சரியாக இருக்காது என்பதால் இருதரப்பும் பேசிக்கொண்டு தான்

எழுதினோம். ஒரு பாண்டிற்கு எவ்வளவு தொகை வரைக்கும் எழுதலாம் என்றால் 3 முதல் 4 லட்சம் வரை எழுதலாம் மினிமம் 50 ஆயிரம். நிறையபாண்டு இருந்தால் நன்றாக இருக்காது என்று 5 பாண்டுகளில் எழுதினோம். ஒரே பாண்டில் கூட 50 லட்சத்திற்கு மேல் வரையில் எழுதலாம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 50 லட்சத்திற்கு ஒரே பாண்டு எழுதினால் அவர்களுக்கும் ஒரு பயம் இருக்கும் எனக்கும் ஒரு பயம் இருக்கும் என்பதால் 5 பாண்டுகளாக பிரித்து எழுதினோம். அவர்களை ஏமாற்றும் நோக்கத்தில் தான் பல பாண்டுகள் தயார் செய்துள்ளேன் என்று சொல்வது சரியல்ல.

கையொப்பம் எந்த மையினால் போட்டார்கள் என்றால் கருப்பு மையினால் போட்டார்கள். நான் முதல அறிவிப்பு எந்த தேதியில அனுப்பினேன் என்றால் 21.3.2020. 21.3.2020 தேதியிட்ட வா.சா.ஆ5 சம்மந்தப்பட்ட அஞ்சல் அட்டையும் மற்றும் ஆர்.பி.ஐ.டி வரவில்லை என்று சொன்னால் என் வழக்கறிஞரிடம் கேட்கவேண்டும். இந்த அறிவிப்பை வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு 23.9.2021 தேதியில் காமராஜா் என்ற வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பில் 10 லட்சம் கொடுத்ததாகவும், 23.7.2020 மட்டுந்தான் ரூபாய் 4 ஆயிரம் மட்டும் வரவு வைத்ததாக அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் ஏற்கனவே 27.7.2017 -ல் இரண்டு பிரதிவாதி கையிலும் ஒவ்வொரு பாண்டுக்கும் ரூபாய் 4 ஆயிரம் பெற்றுக்கொண்டு நான் அவர்களிடம் ஒப்புதல் வாங்கினேன்.

அந்த அறிவிபிபிற்கு அவர்கள் 1.10.2021 அன்று பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்தார்கள். அந்த பதில் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு அறிவிப்பு எனக்கு வரவில்லை. அதே போல் அதை நான் பெற்று கொண்டதற்கான அஞ்சல் அட்டை பிரதிவாதிகளுக்கு வரப்பெற்றுள்ளது என்றால் அது என் வழக்கறிஞருக்கு வரப்பெற்றுள்ளது. இந்த அறிவிப்பும், ஒப்புகை அட்டையும் காலதாமதமாக தயார் செய்யப்பட்டுள்ளது. சாட்சி சொல்கிறார் 29.12.2021-ல் நான் எஸ்.பி. ஆபீசில் புகார் கொடுத்த நேரத்தில் அந்த அதிகாரிகள் பணம் வாங்கி 7 வருடமாகிறது.

அதனால் உடனே வழக்கு போடுங்கள் என்று கூறிவிட்டார்கள். அதன் பிறகு பிப்ரவரி 2022ல் வழக்கு தாக்கல் செய்தோம்.

2022ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது கூட 2017-ல் ஏதாவது வரவு வைத்ததாக வழக்கில ' நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ1, 2 மற்றும் 6 ஆகிய ஆவணங்களில் அதில் உள்ள தொகைகள் கையெழுத்துக்களும் அதில் எழுதப்பட்டுள்ள விவரங்களும் புளு மற்றும் கருப்பு மையினால் மாற்றி மாற்றி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த இடத்தில் வைத்து வரவு வைத்தேன் என்றால் குடியாத்தம் ஸ்டேட் பாங்க் எதிரில் கார்த்திக் டுவீலர் மெக்கானிக் கடை பக்கத்தில் பணம் பெற்றுக்கொண்ட பிரதிவாதிகளிடம் அக்னாலிஜிமெண்ட் பெற்றேன். அங்கு யார், யார் இருந்தார்கள் என்றால் முதல் மேற்குறிப்பின் போது கே.எஸ்.ரவிக்குமார் மற்றும் டி.சீனிவாசன் ஆகியோர்கள் இருந்தார்கள். அந்த மேற்குறிப்பை யார் எழுதினார்கள் என்றால் பெயர் தெரியவில்லை மற்றொரு நபர் அங்கு இருந்தார் அவரை வைத்து எழுதினோம். எழுதியவர் கையெழுத்து போட்டாரா என்றால ' இல்லை. 2வது மேற்குறிப்பில் மதியழகன் மற்றும் மனோகரன் என்பவர்கள் கையெழுத்து போட்டார்கள். 2வது முறை வரவு வைத்து மேற்சொன்ன அதே இடத்தில் ' வைத்து தான் எழுதினோம். பாண்டு எழுதப்பட்ட தேதியிலிருந்து எவ்வளவு நாட்கள் கழித்து வரவு வைத்தோம் என்றால் முதல் ' மேற்குறிப்பு பாண்டு 3 வருடத்தில் காலவாதியாகவதற்கு முன்பாக மேற்குறிப்பு வாங்கப்பட்டது.

2வது கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு எப்பொழுது கொடுத்தோம் என்றால் 9 லட்சத்து 87 ஆயிரம் கொடுத்தேன் 1.10.2014 அன்று கொடுத்தேன். அப்பொழுது 4 பாண்டு வாங்கினேன். அதில் 3 பாண்டு 2 1/2 லட்சம் மற்றும் 1 பாண்டு 2 லட்சத்து 37 ஆயிரம். அந்த 4 பாண்டும் ஒரே தேதியில் எழுதப்பட்டதா வேறு தேதிகளில் எழுதப்பட்டதா என்றால ' ஒரே தேதியில் எழுதப்பட்டது. அந்த பணமும் ரொக்கமாகதத்தான் கொடுக்கப்பட்டது. நான்

வங்கியிலிருந்த எடுத்து வந்து கொடுத்தேனா அல்லது வீட்டிலிருந்து கொண்டுவந்து கொடுத்தேனா என்றால் வங்கியிலிருந்து எடுத்து வந்து தான் கொடத்தேன் அதற்கான வங்கி கணக்கு உள்ளது. அதற்கான வங்கி தொகையை அவர் வங்கி கணக்குக்கு மாற்றாமல் எதற்காக தொகையாக கொடுத்தேன் என்றால் அவர் வழக்கு சம்மந்தப்பட்ட அவர் தம்பி மனைவிக்கு உடனடியாக கொடுக்கவேண்டும' என்று கூறியதால' அவ்வாறு கொடுத்தேன். மேலும் அந்த நேரத்தில் சரியான தனிப்பட்ட வங்கி கணக்கு இல்லை. நான் வங்கியில் பணம் எடுத்ததற்கான வங்கி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

முதலில் கொடுத்த தொகைக்கும் 2வது தொகைக்கம் இடைப்பட்ட காலம் 1 மாதம் அல்லது 26 அல்லது 27 நாட்கள் இருக்கும். இரண்டு பணமுமே வட்டிக்காக கொடுக்கப்பட்டதுஎ ன்றால் ஆமாம். முதலில் கொடுத்த பணத்திற்கே வட்டி வரவில்லைஎன்றால ' சரிதான். முதலில் வட்டி வராமலேயே இரண்டாவது பணம் கொடுத்தேன் என்றால் ஒரு மாதத்திற்குள் என்பதால் அவர்கள் குடும்ப பிரச்சனை முடிவிற்கு வரவேண்டும் என்பதற்காகவும் நல்ல எண்ணத்தில் கொடுத்தேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.